, a software and solutions-
echnopark here, have an-
ship for automotive retail-
offers digital retailing for
s tools to power the cus-
g room to showroom.
n in simplifying the car
ustomers, it was recently
s digital retailing solution
best known for its Dealer-
-first customer experience
or auto dealerships.
in industrial automation,
surement and testing, ma-
development, testing and
clientèle across three con-
multiple Deloitte Techno-
icrosoft Silver Partner and
er.
will strengthen research
tificial intelligence, data
marketing, said Kiran Kar-
nc. "Triassic has been our
and we believe the new
us evolve our product of-
new geographies," he ad-

assic, said the partnership
he future of digital retail-
mense experience working
erts," he said.
offer products and services
The initial area of focus
efore expansion into the
ean markets.

selling country in the world given the growth in sales, according to Raghu M Reddy, (Head) Online Sales, Xiaomi India.

Last year, smartphone sales in India had gone up around 10 per cent. At this pace of growth, he said, India could overtake the US market and become the second-largest smartphone market globally after China.

Speaking on the sidelines of a function to mark the launch of

wake of consumers upgrading to this mid-range segment.

Xiaomi is currently the largest-selling smartphone brand in the country, with a growth of over 300 per cent in 2017. It currently enjoys a market share of over 30 per cent, including online and offline sales in the first quarter. The total size of the smartphone market in the country is estimated at

2017," he said, ac
has a 60 per cen
smartphone sal
has ramped up
cilities and no
spread across
Tamil Nadu and


IDFC

IDFC BANK

**IDFC Bank Limited**

**CIN:** L65110TN2014PLC097792 **email:** bank.info@idfcbank.com **website:** www.idfcbank.com
**Regd. Office:** KRM Tower, 7th Floor, No. 1 Harrington Road, Chetpet, Chennai-600 031
Tel: +91 44 4564 4000 Fax: +91 44 4564 4022
**Corp. Office:** Naman Chambers, C-32, G-Block, Bandra-Kurla Complex, Bandra (E), Mumbai-400 051
Tel: +91 22 7132 5500 Fax: +91 22 2654 0354

**NOTICE**

Pursuant to Regulation 29 read with Regulation 47(1)(a) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, notice is hereby given that a Board Meeting of IDFC Bank Limited (the 'Bank') will be held on **Monday, July 30, 2018** at Chennai to discuss and approve, among other items, the Unaudited Financial Results (subjected to Limited Review by Auditors) of the Bank for the quarter ended June 30, 2018.

The Bank will hold investor / analyst call on the aforesaid financial results on Wednesday, August 01, 2018. Notice of the aforesaid meeting and details of the call will be published on the Bank's website (www.idfcbank.com) and on the website of National Stock Exchange of India Limited (www.nseindia.com) and BSE Limited (www.bseindia.com).

For **IDFC Bank Limited**
**Sd/-**
**Mahendra N. Shah**
*Group Company Secretary & Group Compliance Officer*

Place : Mumbai
Date : July 4, 2018



Dalmia Cement (Bh
Registered Office: Dalm
Distt. Tiruchirapalli,
CIN: U65191TN199
T:011-23465100;Fax:
W:www.dalmiace
NOTICE
NOTICE is hereby given tha
has been fixed as the 'record
the name(s) of the Deben
Privately Placed 10.75% Secu
Convertible Debentures,
INE755K07116, INE755K0
and INE755K07157 allotted o
interest for the period from
will be paid and 10.75% Secu
Convertible Debentures,
No.INE755K07116 and INE75
principal amount will also be
For Dalmia Ce
New Delhi
Dated: 4-7-2018


ment

hat it cannot
personal rap-
s. We have rec-
Chemmanur
hygicart.com
t 60 per cent
partner store
y logging in
financial

rketplace that
mmerce and
a single plat-
tarts his rela-


AMARA RAJA

**AMARA RAJA BATTERIES LIMITED**
CIN: L31402AP1985PLC005305
Registered office: Renigunta – Cuddapah Road, Karakambadi, Tirupati – 517 520, Andhra Pradesh
Corporate Operations Office: Terminal A, 1-18/1/AMR/NR, Nanakramguda, Gachibowli, Hyderabad – 500032
E-mail id: investorservices@amararaja.co.in | Website: www.amararaja.co.in | Tel: 91 (40) 23139000 Fax: 91 (40) 23139001

**NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE(S)**

Notified for information of all concerned that the following shareholder, whose share certificate number with distinctive numbers as detailed herein has intimated the Company that the share certificate have been lost and requested the Company to issue duplicate share certificate(s). The public is hereby cautioned against dealing in any way with the said share certificate(s). Any objection whatsoever in respect of the following share certificate(s) should be intimated to the Company Secretary at the Corporate Operations Office address mentioned hereinabove within 15 days from the date of publication of this notice. If no objection is received within 15 days, duplicate share certificate will be issued to the shareholder(s).

| Name | Folio No. | Distinctive Nos. | | Certificate Nos. | No. of Shares |
|---|---|---|---|---|---|
| | | From | To | | |



Wheels India
CIN: L3
Registered Office: 21, Patullos Road, Chen
Factory: Padi, Chennai - 600 050, Tel: (044) 262
Email: investorservices@wheelsindia.com
NOTICE TO SHAR
(For Mandatory Transfer
of the Company to Inv
and Protection F

This Notice is published pursu
the Companies Act, 2013 read
and Protection Fund Author
Transfer and Refund) Rules,
time to time ("IEPF Rules"). The
to transfer all shares in respect
not been paid or claimed for s
to Investor Education and Pr
("IEPF Authority").
The Company has communic
concerned shareholders whose
transferred to IEPF Authority
encash any of their divide
unpaid/unclaimed for last seve
by the next due date of transfe
The details of such sharehold
number or DP and Client Id an
for transfer are also available
of the Company's website: www
The concerned shareholders
make their claim for the unclai
of shares held by them in writin
Company's Registrar and
M/s Cameo Corporate Servi
Building", 1 Club House Ro
Tel: 044-28460390/91/9
investor@cameoindia.com.
In case shareholders wish to cl
after its transfer to IEPF, a sep

## தமிழ்நாட்டில் புதிதாக 2 பல்கலைக்கழகங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

10–ந்தேதி ஆகிய நாட்டிகளில் அனைத்துலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு மின்னணு கழகம் லிமிமெட் தமிழகத்தில் தனியார் பல்கலைக்கழகம்ஒன்றைநிறுவதற்காக தமிழ்நாடு அரசு சார்பாக டெல்லியில் உள்ள எச்சிஎல் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி எஸ்.எஸ். என். பொறுப்பு கட்டளை சிவ் நாடார் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தனியார் பல்லைக்கழகம் நிறுவுவதற்கு அரசுக்கு கருத்துருவினை அனுப்பி இருந்தது.

தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு பல்கலைக்கழக மானிய குழுவும் விதிகளின்படி தனியாக சட்டம் இயற்ற வேண்டும். எனவே மேற்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, சிவ் நாடார் பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.

### சாய் பல்கலைக்கழகம்

சாய் கல்வி மருத்துவம், ஆராய்ச்சி மற்றும் பொறுப்பு கட்டளை நிறுவனர் உயர் கல்வி வழங்குவதற்காக தமிழ்நாட்டில் சாய் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பி இருந்தது.

எனவே சாய் பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் தெரிவித்துள்ளார்.

### தனியார் சட்ட கல்லூரி துவங்க அனுமதி

சட்ட பட்டங்கள் அல்லது பட்டயங்கள் படிப்பதற்காக தனியார் சட்ட கல்லூரி அமைப்பதற்கு 2011ம் ஆண்டு தடை செய்து அரசு சட்டம் இயற்றியது. இதற்கு சென்னை உயர்நீதிமன்றம் 26.10.2016 அன்று தனியார் சட்ட கல்லூரிகளை தொடங்குவதற்கு முழுமையாக தடை செய்ய முடியாது என்று உத்தரவிட்டிருந்தது.

எனவே தனியார் சட்ட கல்லூரிகளை தொடங்குவதற்கு முழுமையாக தடை செய்வதற்கு பதிலாக தமிழ்நாட்டில் தனியார் சட்ட கல்லூரிகள் நிறுவுவதை ஒழுங்குமுறைபடுத்துவதற்கு வகை செய்யும் சட்ட மசோதாவை இன்று சட்டசபையில் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் தாக்கல் செய்தார்.

## வன்னியர் சமுதாய சொத்துக்களை பாதுகாக்க வாரியம்: சட்டசபையில் மசோதா தாக்கல்

சென்னை, ஜூலை 5–

வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் நன்கொடையாக வழங்கிய சொத்துக்களை பாதுகாப்பதற்கு தனியாக வாரியம் அமைக்க வகை செய்யும் மசோதாவை இன்று சட்டசபையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வளர்மதி தாக்கல் செய்தார்.

தாராள குணம் கொண்ட வன்னியர் குல சத்திரியர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் ஏராளமான சொத்துகளை அறச்செயல்களுக்காக வழங்கி உள்ளனர். அந்த சொத்துக்கள் விற்கப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும் உள்ளது. இதனால் உயில் எழுதிய கொடையாளிகளின் விருப்பங்கள் நிறைவேறாமல் போகிறது. இந்த சொத்துக்களை பாதுகாக்க தனி வாரியம் அமைக்க வேண்டும் என்று ஏராளமான கோரிக்கைகள் வந்தன.

இதனையடுத்து வன்னியர் சமுதாய சொத்துக்களை பாதுகாக்க இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் வளர்மதி கூறினார்.

★ மின்சாரம் தாக்கி பலியான மூவர் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம்
★ வீடு இடிந்து இறந்த இருவருக்கு தலா ரூ.1 லட்சம்
★ தண்ணீரில் மூழ்கி மரணமடைந்த 4 பேருக்கு தலா ரூ.1 லட்சம்
★ சிறுத்தைப் புலி தாக்கி இறந்த பெண்ணுக்கு ரூ.4 லட்சம்
★ மின்னல் தாக்கி பலியானவர் குடும்பத்துக்கு ரூ.4 லட்சம்
★ தென்னை மரம் விழுந்து இறந்தவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.1 லட்சம்

# பல்வேறு விபத்துக்களில் இறந்த 18 பேர் குடும்பத்துக்கு ரூ.30 லட்சம் நிதி உதவி

## சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூலை 5–

**மின்சாரம் தாக்கி, வீடு இடிந்து, தண்ணீரில் மூழ்கி, சிறுத்தைப் புலி தாக்கி, மின்னல் தாக்கி என பல்வேறு விபத்துக்களில் இறந்த 18 பேர் குடும்பத்துக்கு ரூ.30 லட்சம் நிதி உதவி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.**

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று (5–ந் தேதி) சட்டப்பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55ன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்.

மின்சாரம், இடி மின்னல் தாக்கி உயிரிழந்தோர், வனவிலங்கு தாக்கி உயிரிழந்தோர், நீரில் மூழ்கி உயிரிழந்தோர் மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்தோர் ஆகியோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வேண்டி பல சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சி தலைவர் உட்பட பல பேர் நிவாரணம் கேட்டு விண்ணப்பித்து உள்ளார்கள். அதோடு, பேரவை துணைத் தலைவர் மற்றும் அமைச்சர்களிடமிருந்தும் பரிந்துரைத்து உள்ள கோரிக்கைகளும் வரப்பெற்றுள்ளன. இக்கோரிக்கைகளை பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கின்றேன்.

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டத்தைச் சேர்ந்த செல்வராஜ் என்பவரின் மகன் பழனி என்பவர் 5.6.2018 அன்று கொத்தவால்சாவடி அருகில் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி – வேலூர் வட்டம், ஜமீன் எளம்பிள்ளை கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்பவர் 24.5.2018 அன்று மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், வேட்டைக்காரனிருப்பு கிராமத்தைச் சேர்ந்த பக்கிரிசாமி என்பவரின் மகன் பிரகாஷ்ராஜ் என்பவர், 19.6.2018 அன்று, வீடு இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், முகையூர் கிராமத்தைச் சேர்ந்த ஜெயபால் என்பவரின் மகன் மணிகண்டன் என்பவர் 12.6.2018 அன்று எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், மகாதானம் கிராமத்தைச் சேர்ந்த சேப்பையன் என்பவரின் மகன் சண்முகம் என்பவர் கடுவையாறு பிரிவு வாய்க்காலில் விழுந்து, நீரில் மூழ்கி உயிரிழந்தார். நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், ஒரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜபாண்டியன் என்பவரின் மகன் சதீஷ்குமார் என்பவர் நம்பியார் நகர் கடற்கரையில் குளிக்கும் போது, கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார்.

### கடல் அலையில் சிக்கி....

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த பொன்னுசாமி என்பவர் 15.6.2018 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆலாடு கிராமத்தைச் சேர்ந்த பிரகாஷ் என்பவரின் மகள் சிறுமி பிரகதி என்பவர் 20.6.2018 அன்று வாகனம் மோதி சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், ஆனைமலைக் குன்றுகள் கிராமம், காஞ்சமலை எஸ்டேட்டைச் சேர்ந்த மதி என்பவரின் மனைவி கைலாசவதி என்பவர் 15.6.2018 அன்று சிறுத்தைப் புலி தாக்கி உயிரிழந்தார்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பெருந்தலையூர் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் என்பவரின் மனைவி ஆனந்தி என்பவர் பலத்த காற்று மற்றும் மழையின் காரணமாக தென்னை மரம் விழுந்து, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.5.2018 அன்று உயிரிழந்தார்.

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், தெக்கலூர் கிராமத்தைச் சேர்ந்த பழனிசாமி மற்றும் அவருடைய மனைவி மல்லிகா ஆகிய இருவரும் 15.6.2018 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தனர்.

### குட்டை நீரில் மூழ்கி..

பல்லடம் வட்டத்தைச் சேர்ந்த தர்மராஜன் என்பவரின் மகன் ராஜேந்திரன் என்பவர் 20.5.2018 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார். உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை கிராமத்தைச் சேர்ந்த முருக பெருமாள் என்பவரின் மகள் சிறுமி லோக ஜனனி என்பவர் 17.6.2018 அன்று குட்டை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி என்பவரின் மகன் அசோக் மூர்த்தி என்பவர் 3.6.2018 அன்று குட்டை நீரில் மூழ்கி உயிரிழந்தார். கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், புத்தளம் கிராமத்தைச் சேர்ந்த சிவநாராயண பெருமாள் என்பவரின் மகன் சதாசிவம் என்பவர் 29.6.2018 அன்று வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

தோவாளை வட்டம், தாழக்குடி கிராமத்தைச் சேர்ந்த உமையோரான்பிள்ளை என்பவரின் மனைவி சந்திரிகா என்பவர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து 28.6.2018 அன்று உயிரிழந்தார். கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், சேப்ளாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த ஆண்டகுருநாதன் என்பவரின் மகன் ஆனந்தசெல்வன் என்பவர் 2.7.2018 அன்று வயலில் விளையாடிக் கொண்டிருந்த போது, மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 18 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வெல்டிங் வேலையில்....

மின்சாரம் தாக்கி உயிரிழந்த பழனி, மாணிக்கம் மற்றும் செல்வன் மணிகண்டன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்தும், வீடு இடிந்து விழுந்து உயிரிழந்த பிரகாஷ்ராஜ் மற்றும் சந்திரிகா, நீரில் மூழ்கி உயிரிழந்த சண்முகம், சதிஷ்குமார், லோக ஜனனி, அசோக் மூர்த்தி, சாலை விபத்தில் உயிரிழந்த பொன்னுசாமி, சிறுமி பிரகதி, பழனிசாமி மற்றும் அவருடைய மனைவி மல்லிகா, ராஜேந்திரன்,

தென்னை மரம் விழுந்து உயிரிழந்த ஆனந்தி, மற்றும் வெல்டிங் வேலையின் போது உயிரிழந்த சதாசிவம் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும்; சிறுத்தைப்புலி தாக்கி உயிரிழந்த கைலாசவதியின் குடும்பத்திற்கு நான்கு லட்சம் ரூபாய் வனத்துறை மூலமும்; மின்னல் தாக்கி உயிரிழந்த ஆனந்தசெல்வன் குடும்பத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நான்கு லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுதவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ், எச்.வசந்தகுமார், ஆர்.கணேஷ், வி.எஸ்.காளிமுத்து, ச. பாண்டி, எஸ். ராஜேஷ்குமார், இரா.ஜெயராமகிருஷ்ணன், ஆர். டி. அரசு ஆகியோர் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு, ஏற்கனவே என்னால் 14.6.2018 மற்றும் 23.6.2018 ஆகிய தேதிகளில் நிவாரணம் அறிவிக்கப்பட்டு பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு மாவட்ட கலெக்டரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சாலை விபத்து நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



போளூர் ஜெயகோவிந்தன்



டி.சிவராஜ்

# அண்ணா தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள் நியமனம்

## ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

### இணைச் செயலாளர்கள் – நடிகர் போளூர் ஜெயகோவிந்தன், டி.சிவராஜ்

சென்னை, ஜூலை 5–

இலக்கிய அணிக்கு புதிய 2 இணைச் செயலாளர்கள் மற்றும் 3 துணைச் செயலாளர்களை நியமித்து ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள முக்கிய அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

அண்ணா தி.மு.க. இலக்கிய அணி துணை நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் கீழ்க்காணும் பொறுப்புகளுக்கு இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள். அண்ணா தி.மு.க. இலக்கிய அணி இணைச் செயலாளர்களாக நடிகர் போளூர் ஜெயகோவிந்தன், (தென் சென்னை வடக்கு மாவட்டம்) டி.சிவராஜ் (முன்னாள் எம்.சி.,தென் சென்னை வடக்கு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைத் தலைவர்)ஆகியோரும்,

துணைச் செயலாளர்களாக இ.சி. சேகர் (நகர மன்ற முன்னாள் தலைவர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்) ஏ. ஜெயப்பிரகாஷ் (தென் சென்னை வடக்கு மாவட்டம்) டாக்டர் நிர்மலா அருள்பிரகாஷ் (தென் சென்னை தெற்கு மாவட்டம்) ஆகியோரும் நியமிக்கப்படுகிறார்கள்.

அண்ணா தி.மு.க. உடன்பிறப்புகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிடக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூறியுள்ளனர்.

## ரூ.25 கோடியில் மீனாட்சி அம்மன் கோவிலில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம்

# சென்னை தி.நகரில் ரூ.36½ கோடியில் முற்றிலும் தானியங்கி முறையில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம்

## சட்டசபையில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி அறிவிப்பு

சென்னை, ஜூலை 5–

**சென்னை தி.நகரில் 36½ கோடி ரூபாயில் முற்றிலும் தானியங்கி முறையில் இயங்கும் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் செயல்படுத்தப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி அறிவித்தார்.**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் துறை அமைச்சர் எஸ்பி. வேலுமணி இன்று (5–ந் தேதி) சட்டசபையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்தார்.

மதுரை மத்திய தொகுதிக்கு உட்பட்ட, பழைய சென்ட்ரல் மார்கெட், மாட்டுத்தாவணி பகுதிக்கு மாற்றப்பட்டதன் காரணமாக, தற்போது நகரின் மையப் பகுதியில், போக்குவரத்து நெரிசல் சற்று குறைந்துள்ளது.

தற்போது பழைய சென்ட்ரல் மார்கெட் பகுதியில் காலியாக உள்ள இடத்தில், அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள், தங்கள் வாகனங்களை நிறுத்த ஏதுவாக, பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் கூடிய ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள, 24 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த பன்னடுக்கு வாகன நிறுத்துமிடத்தின் முதல் அடித்தளம் 6,394 சதுர மீட்டர் பரப்பிலும், 2ம் அடித்தளம் 6,394 சதுர மீட்டர் பரப்பிலும், ஆக மொத்தம் 12,788 சதுர மீட்டர் பரப்பளவில் அமைய உள்ளது.

இந்த பன்னடுக்கு வாகன நிறுத்துமிடத்தில், 118 நான்கு சக்கர வாகனங்களும், 1,601 இரு சக்கர வாகனங்களும் நிறுத்துவதற்கு ஏதுவாக திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, 13.6.2018 அன்று நடைபெற்ற மாநில அளவிலான உயர்மட்ட வழிகாட்டுக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, செயலாக்கம் பெற அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### பன்னடக்கு வாகன நிறுத்துமிடங்கள்

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அம்மாவின் அரசு, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், பெரு நகர சென்னை மாநகராட்சி உட்பட 9 மாநகராட்சிப் பகுதிகளில், மொத்தம், 335.41 கோடி மதிப்பீட்டில், 14 பன்னடக்கு வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க திட்டமிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, தியாகராய நகரில் உள்ள, தியாகராயா சாலையில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், 36 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணிகள் 2.2.2018 அன்று துவங்கப்பட்டு, துரிதமாக நடைபெற்று வருகின்றன.

★ இந்த பல அடுக்கு வாகன நிறுத்தம், 2 கீழ்தளம், தரைத்தளம் மற்றும் 6 தளங்கள் என மொத்தம் 9 தளங்கள் 8,808 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட கட்டடமாக அமைக்கப்படுகிறது.

★ 2 கீழ் தளத்தில் தோராயமாக 550 இரு சக்கர வாகனமும், தரைத்தளம் மற்றும் 6 மேல்தளத்தில் 250 நான்கு சக்கர வாகனமும் நிறுத்தும் வகையில் அமைக்கப்படும்.

★ இது முற்றிலும் தானியங்கி முறையில் செயல்படும் வகையில் செயல்படுத்தப்படும். இத்திட்டம், பேரிடர்களை சமாளிக்கும் வகையில், நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஆழ்துளை கடைக்கால் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணி ஜனவரி 2020க்குள் முடிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்பி. வேலுமணி கூறினார்.

# தனியார் பள்ளிகளுக்கு கடும் விதிமுறைகள்: சட்டசபையில் செங்கோட்டையன் மசோதா தாக்கல்

சென்னை, ஜூலை 5–

**தனியார் பள்ளிகளுக்கு கடும் விதிமுறைகள் விதித்து சட்டசபையில் பள்ளி கல்வித்துறை அமைச்சர்கே.ஏ.செங்கோட்டையன் இன்று மசோதா தாக்கல் செய்தார்.**

ஒரே மாதிரியான பள்ளி கல்வி சட்டம் மற்றும் இலவச கட்டாய கல்வியை பெறுவது குழந்தைகளின் உரிமை சட்டத்தின் விளைவாக தனியார் பள்ளிகள் அனைத்தையும் நிர்வகிப்பதற்கு ஒரு புதிய விரிவான சட்டத்தினை இயற்றுவது பற்றி ஆலோசிப்பதற்கு நிபுணர் குழு அமைப்பதற்கு ஏற்கனவே சட்டசபையில் 2012ம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்த குழு ஆலோசனைகளை வழங்கி இருக்கிறது. அதன் அடிப்படையில் ஒரு விரிவான சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் உயிர் பாதுகாப்பு மற்றும் உடைமை பாதுகாப்பினை அளிப்பதற்கு அப்பள்ளியை வற்புறுத்துகிறது. தனியார் பள்ளிகளில் தரமான கல்வியை உறுதிப்படுத்த வேண்டும். வருங்காலத்தில் கல்வியை வியாபாரம் ஆக்குவதை தடுக்க வேண்டும். அடிப்படை கட்டமைப்பை உருவாக்கும் சான்றிதழ் வழங்கப்படாத பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கப்படுவது தடுக்கப்படும்.

குறைவான மதிப்பெண் பெறும் மாணவனை வாரிய தேர்வினை எழுதுவதற்கு அல்லது பிற நியமற்ற காரணங்களுக்காக மாணவர்களை தேர்வு எழுத தடுக்கும் யாரையும் தண்டனை விதிப்பதற்கு இந்த சட்ட முன் வடிவு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது என்று அந்த மசோதாவில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறியிருக்கிறார்.

kotak® Kotak Mahindra Bank

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் 27BKC, C 27, G பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (E), மும்பை–400051
நிர்வாக அலுவலகம் : கோட்டக் இன்ஃபினிட்டி, (பில்டிங் எண் 21, இன்ஃபினிட்டி பார்க்)
ஜெனரல் ஏகே வைத்யா மார்க், மலட் (கி), மும்பை – 400 097. www.kotak.com

ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஈடாக வைத்து தங்க நகைக் கடன் வசதியைப் பெற்றுள்ளார்/கள். ஆனால் கடன்தாரர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய தவணைகளை / கடன் பாக்கியைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டனர். எனவே, வங்கியானது கடன்தாரர்களுக்கு அறிவிப்புகளை வழங்கி, கடன் பாக்கிகளை திரும்பச் செலுத்துமாறு கோர நேரிட்டது. அதன் பிறகும் கடன்தாரர்கள் கடன் பாக்கிகளை திரும்பச் செலுத்த் / தீர்க்கத் தவறிவிட்டதால் அடமானத்தில் உள்ள தங்க நகைகளை ஏலம் விடும் நிலைக்கு வங்கி நிர்பந்திக்கப்பட்டுவிட்டது.
கீழ்கண்ட தங்க நகைகளின் ஏலமானது
தேதி : 13.07.2018 நேரம் : காலை 11.00 மணி இடம் : ஸ்ரீகாளஹஸ்தி கிளை வளாகம்

| அபெக் எண். | கடன்தாரர் பெயர் | மாநிலம் | ஊர் | கிளை | மொத்த எடை (கிராம்) | ஏல தேதி |
|---|---|---|---|---|---|---|
| GLN960314 | ஆர். முரளி | ஆந்திரபிரதேஷ் | விஜயவாடா | ஸ்ரீகாளஹஸ்தி | 288.80 | 13.07.2018 |

பங்கு கொள்வோர், சுய அடையாள அட்டையை அதன் நகல் மற்றும் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் சரிபார்க்க வழங்கிட வேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர், விலைக் குறியீட்டுத் தொகையைச் செலுத்தி முடித்து தங்க நகைகளை நம் வசம் எடுத்துக் கொள்ள தவறினால் அவரால் செலுத்தப்பட்ட தொகை பறிமுதலுக்குள்ளாகும். மேல் அறிவிப்பு ஏதுமின்றி ஏலம் நடைபெறும் இடத்தை / தேதியை மாற்றியமைக்க ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமையுண்டு.
மேலும் ஏலம் குறித்த விதிமுறை நிபந்தனைகளையறிந்து கொள்ள, கீழ்காணும் நபரைத் தொடர்பு கொள்ளவும்
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிட்.,
தேதி : 05.07.2018 போன் -7799443030 / 7842018784

THIRU AROORAN

திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எல்டொராடொ, 5வது மாடி, 112 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 600 034
CIN: L15421TN1954PLC002915

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 47 (1) (ஏ)-ன்படி மார்ச் 31 2018-ல் முடிந்த காலாண்டு மற்றும் ஓராண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து அங்கீகரிக்க கம்பெனியின் இயக்குநர்கள் குழுக்கூட்டம் வெள்ளிக்கிழமை, ஜுன் 29, 2018 அன்று நடைபெறும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது, அதற்கு பதிலாக, செவ்வாய்கிழமை, ஜுலை 10, 2018 அன்று மாற்றிவைக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ-க்கு ஜுன் 28, 2018 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டபடி, மேலும் உள்வர்த்தக தடை விதிகளுக்கான கம்பெனியின் நடத்தை விதித்தொகுப்பின்படியும் 2018-19 நிதியாண்டின் முதல் காலாண்டுக்கான நிதி முடிவுகளை கணக்கில் கொள்வதற்காக, நிறுவனத்தின் பத்திரங்களில் வர்த்தகம் செய்வதற்கான சாளரத்தை முடல் ஆகஸ்ட் 16, 2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இடம் : சென்னை
தேதி : ஜுலை 04, 2018
R V தியாகராஜன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

IDFC
IDFC BANK

ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்

CIN: U65110TN2014PLC097792 email: bank.info@idfcbank.com, Website: www.idfcbank.com
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022
கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C-32, G-பிளாக், பந்த்ரா-குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா(E), மும்பை-400 051. தொலைபேசி எண்: + 91 22 7132 5500 பேக்ஸ்: + 91 22 2654 0354

அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 29 மற்றும் விதி 47 (1) (ஏ) ஆகியவற்றின்படி, இதர அலுவல்களுக்கு இடையே ஜூன் 30, 2018 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தணிக்கையாளர்களின் மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டது) விவாதித்து ஒப்புதல் வழங்க ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டின் (''பேங்க்'') குழு கூட்டம் **திங்கட்கிழமை, ஜூலை 30,, 2018** அன்று சென்னையில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் மீது முதலீட்டாளர்/ ஆய்வாளர் அழைப்பு கூட்டத்தை புதன்கிழமை, ஆகஸ்ட் 01, 2018 அன்று வங்கி நடத்தும். மேற்சொன்ன கூட்ட அறிவிப்பு மற்றும் அழைப்பு விவரங்கள் வங்கியின் இணையதளம் (www.idfcbank.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் பிஎஸ்சி லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com) ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
இடம்: மும்பை
மஹேந்திரா N. ஷா
தேதி : ஜூலை 4, 2018
குழும கம்பெனி செயலாளர் மற்றும் குழும ஒப்புதல் அதிகாரி